ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 1819/3 - 2013 ජූලි මස 15 වැනි සඳුදා - 2013.07.15
1819/3 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு யூலை மாதம் 15 ஆந் திகதி திங்கட்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டம்

*3 ஆம் பிரிவின் (4) ஆம் உபபிரிவின் கீழான கட்டளை*

*திருத்தப்பட்டவாறான 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (4)ஆம் உபபிரிவின் இன் கீழ் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, முதலீட்டு விடயம் தொடர்பான அமைச்சர் என்ற வகையில் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் லக்ஷ்மன் யாபா அபேவர்த்தன ஆகிய நான், இக்கட்டளை மூலம் பின்வருமாறு பிரகடனப்படுத்துகிறேன்:-*

*(1) கிழக்கு மாகாணம் திருகோணமலை நிர்வாக மாவட்டம் சம்பூர் பிரதேசத்தில், முதலீட்டைக் கொண்ட இலங்கை முதலீட்டுச் சபையால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கருத்திட்டங்களைத் தோற்றுவித்தல், தாபித்தல் என்பன உள்ளிட்ட கன ரகத் தொழில்களுக்கான விசேட வலயமொன்றை அபிவிருத்தி செய்து, செயற்படுத்தி முகாமைத்துவம் செய்வதுடன், ஆழ் கடல் இறங்குதுறைக் கட்டுமானம் உள்ளிட்ட தமது சொந்த முதலீடு அத்துடன் அல்லது எதிர்கால முதலீட்டாளர்களிடமிருந்து முயன்று பெற்றுக்கொள்கின்ற முதலீடு உள்ளிட்ட சுமார் நாலாயிரம் மில்லியன் அமெரிக்க டொலர்கள்* (US$ 4,000 *மில்லியன்) முதலீட்டைக் கொண்டதும், கல்வி சுகாதார வசதிகள், ஓய்வு மனமகிழ்வு வசதிகளுக்கான நவீன குடியிருப்புக்கள், நிலக்கரி சேகரிப்பிடம் மற்றும் உள்ளக வீதிகள், மின்சார தேவைக்கான ஏற்பாடுகள் நீர் விநியோகம், கழிவு நீர் சுத்திகரிப்புத் தொகுதி என்பன போன்ற ஏனைய வசதிகள் போன்ற எதிர்கால முதலீட்டாளர்களின் முதலீட்டைக் கவரக்கூடிய தேவையான பௌதிக சமூக உட்கட்டமைப்பு வசதிகளை சம்பூர் கன ரகத் தொழில்களுக்கான விசேட வலயத்தினுள் ஏற்படுத்துவதான கருத்திட்டத்தினை மேற்படி சட்டத்தின் தேவைகளுக்காக செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டமொன்றாக இனங்காணப்பட்ட அறிவித்தல் 06.02.2013 ஆம் ஆண்டின் 1796/9 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது,*

*(2) கிழக்கு மாகாணம் திருகோணமலை நிர்வாக மாவட்டம் சம்பூர் பிரதேசத்தில், முதலீட்டைக் கொண்ட இலங்கை முதலீட்டுச் சபையால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கருத்திட்டங்களைத் தோற்றுவித்தல், தாபித்தல் என்பன உள்ளிட்ட கன ரகத் தொழில்களுக்கான விசேட வலயமொன்றை அபிவிருத்தி செய்து, செயற்படுத்தி முகாமைத்துவம் செய்வதுடன், ஆழ் கடல் இறங்குதுறைக் கட்டுமானம் உள்ளிட்ட தமது சொந்த முதலீடு அத்துடன் அல்லது எதிர்கால முதலீட்டாளர்களிடமிருந்து முயன்று பெற்றுக்கொள்கின்ற முதலீடு உள்ளிட்ட சுமார் நாலாயிரம் மில்லியன் அமெரிக்க டொலர்கள்* (US$ 4,000 *மில்லியன்) முதலீட்டைக் கொண்டதும், கல்வி சுகாதார வசதிகள், ஓய்வு மனமகிழ்வு வசதிகளுக்கான நவீன குடியிருப்புக்கள், நிலக்கரி சேகரிப்பிடம் மற்றும் உள்ளக வீதிகள், மின்சார தேவைக்கான ஏற்பாடுகள் நீர் விநியோகம், கழிவு நீர் சுத்திகரிப்புத் தொகுதி என்பன போன்ற ஏனைய வசதிகள் போன்ற எதிர்கால முதலீட்டாளர்களின் முதலீட்டைக் கவரக்கூடிய தேவையான பௌதிக சமூக உட்கட்டமைப்பு வசதிகளை சம்பூர் கன ரகத் தொழில்களுக்கான விசேட வலயத்தினுள் ஏற்படுத்துவதான கருத்திட்டத்தினை மேற்படி சட்டத்தின் தேவைகளுக்காக செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டமொன்றாக பிரகடனப்படுத்துவதற்காக 3 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் பிரகாரம் அமைச்சரவையின் அனுமதி பெறப்பட்டுள்ளது.*



*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

2 - PG 001682

(3) "கிழக்கு மாகாணம் திருகோணமலை நிர்வாக மாவட்டம் சம்பூர் பிரதேசத்தில், முதலீட்டைக் கொண்ட இலங்கை முதலீட்டுச் சபையால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கருத்திட்டங்களைத் தோற்றுவித்தல், தாபித்தல் என்பன உள்ளிட்ட கன ரகத் தொழில்களுக்கான விசேட வலயமொன்றை அபிவிருத்தி செய்து, செயற்படுத்தி முகாமைத்துவம் செய்வதுடன், ஆழ் கடல் இறங்குதுறைக் கட்டுமானம் உள்ளிட்ட தமது சொந்த முதலீடு அத்துடன் அல்லது எதிர்கால முதலீட்டாளர்களிடமிருந்து முயன்று பெற்றுக்கொள்கின்ற முதலீடு உள்ளிட்ட சுமார் நாலாயிரம் மில்லியன் அமெரிக்க டொலர்கள் (US$ 4,000 மில்லியன்) முதலீட்டைக் கொண்டதும், கல்வி சுகாதார வசதிகள், ஓய்வு மனமகிழ்வு வசதிகளுக்கான நவீன குடியிருப்புக்கள், நிலக்கரி சேகரிப்பிடம் மற்றும் உள்ளக வீதிகள், மின்சார தேவைக்கான ஏற்பாடுகள் நீர் விநியோகம், கழிவு நீர் சுத்திகரிப்புத் தொகுதி என்பன போன்ற ஏனைய வசதிகள் போன்ற எதிர்கால முதலீட்டாளர்களின் முதலீட்டைக் கவரக்கூடிய தேவையான பௌதிக சமூக உட்கட்டமைப்பு வசதிகளை சம்பூர் கன ரகத் தொழில்களுக்கான விசேட வலயத்தினுள் ஏற்படுத்துவதான கருத்திட்டத்திம்" என மேற்படி செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டம் அழைக்கப்பட்டு இனங்காணப்படுவதோடு, கருத்திட்ட நிறுவனம் வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கா கேற்வேய்ஸ் இண்டஸ்றீஸ் (தனியார்) நிறுவனமாகும்;

(4) 2012 ஆம் ஆண்டு யூன் மாதம் 13 ஆந் திகதி இலங்கை முதலீட்டுச் சபைக்கும் கருத்திட்ட நிறுவனத்துக்கும் இடையில் நிறைவேற்றப்பட்ட கருத்திட்ட ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டு வரையறுக்கப்பட்டுள்ளபடியான பயனுறு திகதியில் இருந்து ஏழு (07) வருடங்களுக்குள் மேற்படி கருத்திட்டம் அதன் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும், மற்றும் ;

(5) இக்கட்டளையின் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட சட்டங்களில் இருந்தான விலக்களிப்புக்கள் இங்கு குறிப்பிடப்பட்ட வரையறைகளுக்கு உட்பட்டவாறாக கருத்திட்ட நிறுவனத்துக்கு ஏற்புடைத்தாகும்.

### அட்டவணை

(அ) 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம்

- கருத்திட்டம் மூலமாக ஈட்டும் இலாபம் மற்றும் ஆதாயம் மீது கருத்திட்ட நிறுவனத்துக்கு வருமான வரி விதிப்பனவு தொடர்பில் திருத்தப்பட்டவாறான 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஏற்பாடுகள் இருபத்தைந்து (25) வருடங்கள் ("வரி விலக்களிப்புக் காலம்") எனும் காலப்பகுதியொன்றுக்கு பிரயோகமாகாது. இலாபங்களிலிருந்து இருந்து பங்குதாரர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட பங்கு இலாபங்களுக்கு சொல்லப்பட்ட இருபத்தைந்து (25) வருட கால வரி விலக்களிப்புக் காலப்பகுதியிலும் அதன் பின்னர் ஒரு (01) வருடத்துக்கும் வருமான வரியிலிருந்து விலக்களிப்பு வழங்கப்படும்;

- சொல்லப்பட்ட வரி விலக்களிப்புக் காலமானது கருத்திட்ட நிறுவனம் வரி விதிப்பனவுக்கான இலாபத்தை ஈட்டும் முதல் ஆண்டு அல்லது வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பித்த இரண்டு (02) வருடங்களின் பின்னால், அவற்றுள் எது முன்னர் வருகிறதோ அந்த ஆண்டு தொடக்கம் கணிக்கப்படும்;

- மூலதனச் செலவுக்காகப் பெறப்பட வெளிநாட்டு கடன்கள் மீதான வட்டி மற்றும் கருத்திட்டத்தில் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ள உசாத்துணையாளர்களுக்குச் செலுத்தப்பட்ட தொழில்நுட்பக் கட்டணம் ஆகியவை தொடர்பில் தடுத்து வைக்கும் வரி செலுத்துவதிலிருந்து கருத்திட்ட நிறுவனத்துக்கு விலக்களிப்பு வழங்கப்படும்;

- ஆயின், மேற்சொல்லப்பட்ட வரி விலக்களிப்புக் காலப்பகுதி முடிவடைந்த பின்னர், கருத்திட்ட நிறுவனத்தின் இலாபங்கள் மற்றும் வருமானம் தொடர்பில் அக்காலத்தில் அமுலில் இருக்கும் உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் வருமான வரி செலுத்தப்பட வேண்டும்;

- கருத்திட்ட நிறுவனத்தின் ஆகக்கூடிய வெளிநாட்டு ஊழியர்கள் இருபது (20) பேர்களுக்கு நீங்கள் உழைத்துச் செலுத்தும் வரியிலிருந்து (PAYE) விலக்களிப்பு ஏற்புடைத்தாகும். வர்த்தக நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து ஐந்து (05) வருடங்கள் எனுமொரு காலப்பகுதிக்கு இச்சலுகை ஏற்புடைத்தாகும்.

(ஆ) 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சேர்பெறுமதிவரிச் சட்டம்

- கருத்திட்ட நிர்மாண காலகட்டத்தின் போது கருத்திட்டம் தொடர்பான பொருட்களின் இறக்குமதி மற்றும் கருத்திட்டம் சம்பந்தப்பட்ட பொருட்களின் உள்நாட்டுக் கொள்வனவுகள் மற்றும் சேவைகள் மீது திருத்தப்பட்டவாறான 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சேர்பெறுமதி வரிச் சட்டத்தின் கீழ் சேர்பெறுமதி வரி செலுத்தலிலிருந்து விலக்களிப்பு வழங்கப்படும். கருத்திட்ட நிறுவனம் அல்லது கருத்திட்டத்திற்கான நேரடி வழங்குகைகள் மட்டுமன்றி கருத்திட்ட

***அட்டவணை** (தொடர்ச்சி)*

*நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்டவாறாக கருத்திட்டத்துக்கு/ நிறுவனத்துக்கு விநியோகிப்பதற்காக உப ஒப்பந்தக்காரர் ஒருவரால் ஒப்பந்தக்காரர் ஒருவருக்குச் செய்யப்படும் வழங்குகைகளுக்கும் இந்த சேர்பெறுமதி வரி விலக்களிப்புப் பிரயோகமாகும்;*

- *கருத்திட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் கருத்திட்டத்தின் கட்டம் I முடிந்தபின் அல்லது ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ளபடியான பயனுறு திகதியிலிருந்து மூன்று (03) வருடங்கள் எனும் காலப்பகுதிகளில் எது முன்னர் வருகிறதோ அந்த திகதி தொடக்கம் கருத்திட்டட நிர்மாண/ கட்டுமான காலகட்டத்தின் போது கருத்திட்ட நிறுவனத்தினால் வழங்கப்பட்ட சேவைகளிலிருந்து கிடைக்கும் வருமானம் பூஜ்ய வீதத்திலிருக்க வேண்டும்;*

- *கருத்திட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் கருத்திட்டத்தின் கட்டம் I, II, III முடிந்தபின் அல்லது ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ளபடியான பயனுறு திகதியிலிருந்து ஏழு (07) வருடங்கள் எனும் காலப்பகுதிகளில் எது முன்னர் வருகிறதோ அந்த திகதியின் பின்னர் கருத்திட்ட நிறுவனத்தினால் வழங்கப்பட்ட சேவைகளிலிருந்து கிடைக்கும் வருமானம் பூஜ்ய வீதமாக்கப்படல் வேண்டும். சேர்பெறுமதி வரிச் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் உட்பிரிவு (1) இன் பந்திகள் (ஆ) மற்றும் (இ) ஆகியவற்றின் ஏற்பாடுகளின் கீழ் வழங்கப்பட்ட சேவைகள் உட்படும் பட்சத்தில் சேர்பெறுமதி வரி செலுத்தல் பூஜ்ய வீதமாக்கப்படும். பூஜ்ய வீதத்துக்குட்படுத்தப்பட்ட சேவைகளை விடுத்து வேறு ஏதும் சேவைகள் மீது பொதுவான சேர்பெறுமதி வரி செலுத்தல் ஏற்புடைத்தாகும்.*

*(இ) 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி விதிப்பனவுச் சட்டம்*

*கருத்திட்ட நிர்மாண / கட்டுமான காலகட்டத்தின் போது கருத்திட்டத்தை நிர்மாணிப்பதற்காக இறக்குமதி செய்யப்படும் எல்லா பொருட்கள் மீதும் திருத்தப்பட்ட 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி விதிப்பனவுச் சட்டத்தின் கீழான துறைமுக மற்றும் விமான நிலையங்கள் விதிப்பனவிலிருந்து நிறுவனத்துக்கு விலக்களிப்பு வழங்கப்படும்.*

*(ஈ) 2009 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க தேசத்தைக் கட்டியெழுப்பும் வரிச் சட்டம்*

*ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டவாறான பயனுறு திகதியில் இருந்து மொத்த ஏழு (07) வருடக் காலப்பகுதியொன்றுக்கு திருத்தப்பட்டவாறான 2009 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க தேசத்தைக் கட்டியெழுப்பும் வரிச் சட்டம் ஏற்புடைத்தாகாது.*

*(உ) 2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க நிதிச் சட்டம்*

*ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டவாறான பயனூறு திகதியில் இருந்து கருத்திட்ட நிர்மாண/கட்டுமான காலப்பகுதியான (07) வருடங்கள் எனுமொரு காலப்பகுதிக்கு கட்டடக் கைத்தொழில் உத்தரவாத நிதிய விதிப்பனவிலிருந்து மட்டும் திருத்தப்பட்டவாறான 2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க நிதிச் சட்டம் ஏற்புடைத்தாகாது.*

*(ஊ) (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டம்*

*ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டவாறான பயனூறு திகதியில் இருந்து கருத்திட்ட நிர்மாண/கட்டுமான காலப்பகுதியான (07) வருடங்கள் எனுமொரு காலப்பகுதிக்கு, கருத்திட்டத்துக்கு தேவைப்படும் கருத்திட்டம் தொடர்பான மூலதன மற்றும் கட்டுமான பொருட்களின் இறக்குமதி, அவை நேரடியாக கருத்திட்ட நிறுவனத்தினால் இறக்குமதி செய்யப்படினும் கருத்திட்டத்தை அமுலாக்கும் நிறுவனத்தின் பெயரில் ஒப்பந்தக்காரகளால் செய்யப்படினும், இலங்கை முதலீட்டுச் சபையினால் அங்கீகரிக்கப்பட்டவாறாக கருத்திட்டத்துக்காகவென மட்டும் இறக்குமதி செய்யப்படும் அவ்வாறான பொருட்கள் மீது சுங்கக் கட்டண விலக்களிப்பு ஏற்புடைத்தாகும்.*

*லக்ஷ்மன் யாபா அபேவர்த்தன, பா. உ.,*
*முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர்.*

கொழும்பு,
*2013, யுலை 11.*

*8- 16*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*